பாலவிநோதினி

தொகுதி 4 பகுதி 3

மேஷ, 1922

JL
4,9(M211,N14
N22.4.3.
186451

76

Regd. No. M. 1530

BALAVINODINI

OR

THE CHILDREN'S FRIEND

An Illustrated Tamil Monthly for Children

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

Vol. IV] March 1922 [No. 3

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
SRI BALASUBRAMANYAM & Co.,
Royapettah P. O., MADRAS.

...on Island Rs. 1—8
Foreign Rs. 2—0

BALAVINODINI

The Children's Friend

Yearly Subscription Rs. 1—8—0; Foreign Rs. 2.

I Vol. 1919 Calico Gold Gilt bind	Rs.	2	0	0
II Vol. 1920 Do. ...	Rs.	2	0	0
III Vol. 1921 Do. ...	Rs.	2	0	0

To the Subscribers of Bala Vinodini each Rs. 1-12-0.

N. B.—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our Bonafide receipts.

ENGLISH NOVELS

G. W. M. Reynold's.

BOLD TYPE EDITIONS.

		Rs.	
1.	Ellen Percy 8 vols.	5	
2.	Mary Price, 8 vols.	5	
3.	Young Duchess 4 vols.	3	
4.	Rosa Lambert, 4 vols.	3	
5.	Loves of the Harem, 4 vols.	3	
6.	Margaret, 4 vols.	3	
7.	The Massacre of Glenco, 4 vols.	3	
8.	The Virgin's Kiss 4 vols.	3	
9.	Canonbury House 3 vols.	2	
10.	Mysteries of Old London 3 vols.	2	4
11.	Pope Joan, 3 vols.	1	12
12.	Soldier's Wife, 2 vols.	1	6
13.	Robert Macaire, 2 vols.	1	4
14.	Grace Darling	0	12
15.	Young Fisherman	0	10
16.	Agnes 9 vols.	6	0
17.	Mary Stuart, 2 vols.	1	4
18.	May Middleton 2 vols.	1	8
19.	Kenneth, 4 vols.	3	0
	MYSTERIES OF PARIS BY EUGENE SUE. 2 vols. ...	1	0

Manager, **BALAVINODINI OFFICE,**
ROYAPETTAH P. O.
MADRAS

நோக்கி "[12]அரசரேறே! உன் சற்குணத்தை முன்னிட்டு உன்னைக்காக்கும் வண்ணம் இவ்விடம் அடைந்தேன். இன்றைக்கு ஏழாம் நாள் ஒரு ஜலப்பிரளயம் உண்டாகப் போகிறது. அச்சமயம் ஓடம் ஒன்று நமது கருணை விசேஷத்தால் உன்னிடம் வரும். அதில் நீ மகரிஷிகள் எழுவருடனும் [13]ஒஷதிகளுடனும் ஏறி மச்சரூபமாய்க் காணப்படும் எனது கொம்பில் அப்படகைக் கட்டுக. பிரமன் தூக்கத்தினின்றும் எழுந்திருக்கும் வரையில் நான் உன்னைப் பாதுகாக்கிறேன்" என்றுரைத்து மறைந்தருளியது. அவ்வாறே [14]நரேந்திரன் செய்தனன். மச்சமூர்த்தி அரசனைக்காத்து, பிரமனது உறக்கத்தில் வேதங்களைத் திருடி யொளித்த சோமுகனைச் சங்கரித்து அவற்றைப் பிரமனுக்கு உதவினர். இந்த அரசனே [15]வைவச்சுதமநு. இந்த அவதாரத்தில் பகவான் வைவச்சுதமநுவையும், பூதேவியையும், ஒஷதிகளையும், மகரிஷிகளையும் பிரமதேவனையும் இரக்ஷித்தருளினர்.

இந்த அவதாரத்தால் நாம் தெரிந்து கொள்ளத் தக்கது யாது? பகவான் தமது சிருஷ்டிப் பொருளாகிற ஜீவராசிகளை அநாதரவு செய்யாமல், மச்சம் எப்படித் தானிடும் முட்டைகளைத் தன் பார்வையால் குஞ்சுகளாக்கிப் பாதுகாக்கின்றதோ அப்படித் தமது பேரருள் நிறைந்த [16]கடாக்ஷ விசேஷத்தால் ஆதரித்து வருகிறாரென்பதாம்.

[17]முச்சகமு நின்றன் [18]முதிர்கருணை நோக்கி [19]லுய்யான்
மச்சவுரு [20]வேறறனை நின் [21]மாண்பெவரே வாழ்த்தவல்லார்

---

[12]இராஜாதி ராஜனே. [13]மூலிகைகளுடன். [14]ஜனங்களுக்குத் தலைவன் அரசன்; [15][illegible] [16]கடைக்கண்பார்வையால்; [17][illegible] [18]பெரிய [illegible] [19]பிழைக்க; [20]கொண்டாய்; [21][illegible]மை.

186451

மனிதர்களின் குணம்

மனிதர்களுடைய குணங்கள்—பலவாருக இருக்கின்றன. அவற்றை நான்குவகையாசப் பிரிக்கலாம்.

(1) சிலர் பேரறிவும் சுறுசுறுப்புமுடையவரா யிருக்கின்றனர். (Some are ingenious and industrious).

(2) சிலர் பெரிய அறிவுடையவரா யிருக்கிறார்கள்; இருந்தும் சோம்பேறிகளா யிருக்கிறார்கள். (Some are ingenious and idle).

(3) சிலர் மந்தபுத்தி உடையவராயிருக்கிறார்கள்; ஆனால் விடாமுயற்சியும் உழைப்புமுடையவரா யிருக்கிறார்கள். (Some are dull and deligent).

(4) சிலர் திருத்தமுடியாத அவ்வளவு மந்த புத்தியுடையவராயிருக்கின்றனர்; இதோடு கவனக் குறைவுமுடையவராயிருக்கின்றனர். (Some are invincibly dull and negligent also).

மழையின் வரவைக்காட்டும் அறிகுறிகள்.

தருவம்

"ஆறுவெள்ளம் காலேவரத் தோன்றுதேகுறி—மலை
யாளமின்னல் ஈழ மின்னல் சூழமின்னுது—
நேற்றுமின்றும் கொப்புசுற்றிக் காற்றடிக்குது—கேணி
நீர்ப்படும் சொறித்தவளை கூப்பிடுகுது.
சேற்றுநண்டு சேற்றறைக் கிள்ளி சேற்றடைக்குது—[மழை
தேடியொரு கோடிவர்னம் பாடியாடுது
போற்றுதிருமாலழகர் ஏற்றமாம பண்ணைச்—சேரி
புள்ளிப்புள்ளி ஆடிப்பாடித் துள்ளிக்கொள்ளுமே."

(இது கள்ளர் பாடும் உழவுப்பாட்டு.)

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 4	1922ஞ மார்ச்சுமீ	பகுதி 3

மச்சியாவதாரம்.

ஒரு [1]கற்பத்தில் பிரளயம் உண்டாயிற்று. அப்போது [2]சிருஷ்டி கர்த்தாவான [3]சதுர்முகக் கடவுள் [4]உறக்கங் கொண்டனர். அதனையறிந்த [5]சோமுகாசுரன், பிரமதேவனிட மிருந்த வேதங்களைக் [6]கவர்ந்துகொண்டு சமுத்திரத்தில் ஒளிந்துகொண்டான். இந்த ஸம்பவம் ஏழாவது [7]மநுவந்தரத்தில் நடந்

---

[1] யுகத்தின் முடிவுகாலத்தில்; [2] எல்லாவற்றையும் உண்டாக்கும்படியான; [3] நான்கு முகங்களையுடைய; [4] தூக்கம்: [5] குதிரையின் முகத்தையுடைய அசுரன்; [6] அபகரித்துக்கொண்டு; [7] யுகமுடிவான காலத்தில்.

தது. அச்சமயம் விவசுவானுடைய புத்திரனும் சிரார்த்த தேவன் என்னும் பெயருமுள்ள இராஜரிஷியுமாகிய சத்திய விரதன் அரசு செலுத்தி வந்தான். ஒருநாள் அரசன் கிருதமாலா நதிக்கு ஸ்நானஞ் செய்யச் சென்று தர்ப்பணாதிகள் முடிக்கையில் சிறுமீன் ஒன்று அவ்வேந்தனை நோக்கி "அரசனே! நான் ஜலப்பிராணிகளால் துன்பமடைகிறேன். என்னை வேறொரு நல்ல இடத்திலே சேர்த்தால் உனக்குப்பெரும் புண்ணியமாகும்" என்று கேட்டுக்கொண்டது.

சத்தியவிரதன் அந்த மீனைத்தன் கைக் [8]கமண்டல பாத்திரத்திலேற்று வளர்த்து வந்தனன். அது அப்பாத்திர முழுதும் தன் உடலைப்பெருக்கி, மன்னனைப் பார்த்து, "ஏ தருமபூபதி! இந்தப்பாத்திரம் எனக்குப் போதுமான இடமாயில்லை. நானோ நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறேன். தக்க இடத்தில் என்னை ஆதரிக்க வேண்டும்" என்று சொல்லிற்று. வேந்தன் அதனை மற்றொரு பெருங் கொப்பரையில் விட்டனன். அங்கும் அவ்வகை செய்ய, [9]காவலன் அம்மச்சத்தை ஒரு மடுவில் விடுத்தனன். அதுவும் போதாததாகவே, [10]தராதிபன், ஆச்சரியப்பட்டு "ஓஹோ! இது சாதாரண மீனன்று. பகவான் ஏதோ ஒரு காரணம் பற்றி இவ்வாறு உருக்கொண்டனர்" எனத்துணிந்து மிக்க பக்தி விநயத்துடன் அம்மச்சத்தை வணங்கித் துதித்துக் கடலில் விட்டனன்.

அப்போது அம்மீன் [11]பூபாலனை முகங்குளிர

---

[8]செம்புபோன்ற பாத்திரம்; [9]அரசன்; [10]பூமிக்குத் தலைவன் அரசன்; [11]அரசனை;

மூன்றும்—வகுப்பினர், நடுத்தரமானவர்கள். இவர்கள் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு தங்களுடைய வேலையிலே முயல்கிறவர்களாகையினாலே இவர்களுடைய உழைப்பிற்குப் பயனில்லாமற் போகாது. ஆகையினால் இவர்கள் எப்போதும் காரியசித்தி பெறுவார்கள். உழைப்பினால் அதிக நன்மை யுண்டாகும். அதனால் அறிவும் விருத்தியாகலாம். தேகம் திடமாயிருக்கும். உற்சாகமும் உண்டாகாலாம். இவ்வளவு நன்மைதரக்கூடிய உழைப்புடன் இவர்களுக்குச் சுறுசுறுப்பும் சேருமாயின், இவர்கள் முதல் வகுப்பினராய் எல்லா நன்மையையும் பெறுவார்கள் என்பதில் ஐய மில்லை.

(4) சிலர் திருத்தமுடியாத அவ்வளவு மந்தபுத்தியுடையவராயிருக்கின்றனர். இதோடு கவனக்குறைவுமுடையவராயிருக்கிறார்கள்—

இவர்கள் நல்ல நிலைமைக்கு வருவது எக்காலத்திலும் மில்லை. இவர்கள் உலகத்திலிருந்து உலாவுவதனால் நல்லவர்களையும் கெடுப்பார்கள். ஆகையினால் இவாகள் இருப்பதைவிட இறந்தொழிவது நல்லதாகும்.

"விலங்கொடு மக்களனையர், இலங்குநூல்
கல்லாரோ டேனையவர்" (தமிழ்வேதம்)

ஆகையினால் மனிதராகப் பிறந்தவர்கள் எப்பாடுபட்டாவது அறிவென்கிற செல்வத்தைப் பெருமுயற்சி செய்து தேடிக்கொள்ளவேண்டும். இல்லையாயின் அவர்கள் மிருகத்துக் கொப்பாய் உழலவேண்டியவர்களாவர்.

அறிவை அபிவிருத்தி செய்துகொள்ள முக்கியமான கருவிகள்—நல்ல சகவாசம், கல்வி, சிறந்த உழைப்பு, விடாமுயற்சி முதலிய இவைபோல்வனவாம்.

அறிவே ஆற்றல்; அறிவே செல்வம்;
அறிவே அருந்துணை! அறிவே கட்டு;
அறிவே தெய்வம்.

வித்தை.

(52-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவை விசாலப்படுத்தி மக்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரச் செய்வது எதுவோ அதுவே சரியான வித்தை. அந்த வித்தையே கல்வி. அது கரையில்லாத கடலுக்குச் சமானமானது. அதை முழுதுங் கற்றவர் கடவுள் ஒருவரே. மற்றவரெல்லாம் அரை குறையான கல்வியை யுடையவரே. ஆனால் பாற்கடலைக் கண்ட பூனை அந்தப்பால் அவ்வளவையும் குடிக்க ஆசைப்படுவதுபோல், கல்வியை முற்றுங் கற்க நாம் ஆசைப்படலாம். பூனைக்குப் பெரியவயிறு இல்லாததுபோல நமக்கு அதிக நாள் இல்லை. ஆகையால் கற்றவரையில் திருப்தியடைந்து அதனால் ஆகத்தக்க நன்மையை நாடாமல் அகங்காரங் கொள்வதுகூடாது. "முற்றும் உணர்ந்தவர் இல்லை, முழுவதும்; கற்றனம் என்று களியற்க" (அகங்கரியா திருக்கக் கடவாய்) என்று பெரியோர் சொல்லியிருக்கின்றனர்.

கற்றதனால் ஆகவேண்டிய நன்மை அடக்கமேயாம். அந்த அடக்கம் அவர்களை உந்நத பதவியில் சேர்க்கும். அடங்காவிடின் அவர்களை அது தாழ்ந்த பதவிக்குத் தள்ளிவிடும். "தன்னைப் புகழ்தலுந் தகும்புலவோர்க்கே" என்னும் அதிகாரம் சிற்சில சந்தர்ப்பங்களை உத்தேசித்து அவர்களுக்குக் கொடுக்கப் பெற்றிருக்கிறதே ஒழிய, 'சந்துவிட்டாய் வந்துவிட்டேன்' என்று

இவ்வாறு (Thomas Fuller) தாமஸ் புல்லர் என்கிற ஆங்கிலேய நிபுணர் ஒருவர் தவுஸண்டு அண்டு ஒன்ஜெம்ஸ் (Thousand and one Gems) என்கிற புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

இந்த நான்கு வகுப்பினருள் முதல் வகுப்பைச் சேர்ந்தவரே உத்தமமானவர். இவர்கள் தாங்கள் ஒன்றை ஒரு முறை படித்தாலும், கேட்டாலும் பிறர் ஒரு முறை படிக்கக்கேட்டாலும், பிறகு எப்போதும் அதை மறக்கமாட்டார்கள். இவர்களை ஏகசந்தகிராகி (ஒரு முறை கேட்டதும் தெரிந்துகொள்ளுகிறவர்) என்று கூறுவார்கள் பெரியோர்கள். இப்படிப்பட்டவர்கள் தாம் உலகத்தில் பெரிய மேதாவிகளாகிறவர்கள். இவர்களுக்குத்தான் உலகமெல்லாம் கொண்டாடத்தக்க பெரும்புகழுண்டாகும். இவர்களுக்கு உலகமெல்லாம் உறவாகும். இவர்கள் செய்யும் செய்கை உலக உபகாரமாயிருக்கும். இவர்களே அரியபெரிய காரியங்களைச் சாதிப்பார்கள். இவர்கள் தான் ஞானிகளாகிறார்கள். இவர்களுக்குத்தான் வேதத்தின் உண்மை விளங்கும்; கடவுளின் அருள் பெறும் வழி தெரியும். இவர்கள் தாங்கள் கண்டு இன்பமடைவதை உலகத்தவரும் கண்டுணர்ந்து இன்பமடையும்படியான வழியைத் தேடுவார்கள்.

இவர்களுக்குத் தொடங்கிய செய்கையை முடிக்கும் சக்தியுண்டு. இவர்களே வீரர்களும் சூரர்களும் வித்

---

(1) நீதியும் ஞானமும் நன்னிடம் நிலைபெற
ஓதி யுணர்ந்துநல் ஒழுக்கத் துயர்ந்திரு.

(2) கொண்ட நியமம் குறைவுறா வழியினில்
ஐய மிட்டுண்பதே அறிஞருக் கழகு.

வான்களுமாக விளங்குவார்கள். இவர்களுடைய மாமிச உடம் பழிந்தாலும் புகழுடம்பு, இந்த உலகமுள்ளவரையில் அழியாது.

இரண்டாவது வகுப்பினரும் ஏகசந்திராகிகளே. நல்ல புத்தியிருக்கிறதல்லவா? புத்தியின் சக்தி குறைவதில்லை. ஆயினும் சோம்பல் என்கிற ஒருதிரை அதனை மறைக்கின்றமையால், அதாவது தடுக்கின்றமையால் அதன் பிரகாசம் தடைபடுகிறது. அதனால் அந்தப் புத்தி உணர்வதையெல்லாம் வெளியில் அநுபவத்திற்குக் கொண்டுவரமுடியாமல் போகிறது. "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்" என்று ஔவைப்பிராட்டியார் கூறியபடி இவர்கள் பலவிதத்திலும் கஷ்டப்படுகிறார்கள். "ஐயோ! நல்ல புத்தியிருக்கிறது! கஷ்டப்படுகின்றான் பாவம்!" என்று உலகத்தில் இப்படிப்பட்ட புத்திமானைப்பார்த்து பரிதாபப்படுவதை நாம் பார்க்கிறோமல்லவா? பணமிருந்தும் எடுத்துச் செலவழிக்க வழியற்றவர்களைப் போலல்லவா இருக்கவேண்டியதாய் இருக்கிறது! ஆகையினால் சோம்பல் என்கிற பகைவனுக்கு எந்தவேளையிலும், இடங்கொடுப்பதுகூடாது. சோம்பலை ஒழிப்பார்களாயின், இவர்கள் முதல் வகுப்பினரைப் போல் எல்லாவிதத்திலும் சிறப்படைவார்கள்.

கயவர்செயல்.

"வனவிலங்கும் விண்வாழ் பட்சியுந்தம்தம்
இனமொட ன்றி யெடா திரை யேழைகட்
கனமிடா துதம் ஆழ்வயி றென்றையே
மனமுவந்து வளர்ப்பர் கயவரே"—நீதிநூல்

* வனவிலங்கு=காட்டுமிருகம், விண்=ஆகாயம், இனம்=தம் கூட்டம், இரை=உணவு, கயவர்=மூடர்.

டல், அறியாது கேட்டல், சந்தேகங்கொண்டு கேட்டல், ஒன்றைக் கொள்ளக் கேட்டல், கொடுக்கக் கேட்டல், செய்யக் கேட்டல் என்பனவாம். விடைவகையில் ஒன்றைச் சுட்டிச் சொல்லும்விடை, மறுத்துச்சொல்லும் விடை, உடன்பட்டுரைக்கும்விடை, ஏவும்விடை, எதிர் கேட்கும்விடை, நடந்தது உரைக்கும்விடை, நடக்கப் போவதுரைக்கும்விடை, மற்றொன்று செய்வேனென்னும் விடை என்பனவாம்.

இப்போது வினாவிடைகளின் கூறுபாட்டைத் தெரிந்துகொண்டாயா? இவற்றுள், என்ன கேள்வி நீ என்னைக் கேட்கப்போகிறாய்? நல்லது—கேள்—பார்ப்போம்" என்றான்.

வேலைக்காரி:—"என்ன ஐயா நீர் கற்றவையெல்லாம் என்னிடங் கத்துகிறீர். யாராவது வேலையற்றுப் போயிருந்தால் அங்கே நீர் சாவதானமாய் உட்கார்ந்துகொண்டு மனம்போனபடி பேசலாம். உமக்கு விடையளித்துக் கொண்டிருக்க எனக்கு வேறு வேலையில்லையா? என்னவோ நீர் வித்துவான் என்று வந்ீரே என்று மரியாதையாகச் சொன்னால் உமது கல்ஞானத்தைக் கவிழ்க்கிறீர். ஐயையோ! 'மனதிலிருக்கும் இரகசியம் மதிகேடனுக்கு வாக்கிலே' என்பதை மறந்துபேசுகிறீர். "முகத்துக்கு முகமல்லவா கண்ணாடி. ஒன்று கேட்கிறேன். பதிலுரையும். கேட்கட்டுமா?" என்றாள்.

வித்துவான்:—"நீ மயங்குவதே கேட்டது போற்றான்" என்றான்.

வேலைக்காரி:—"அ[illegible] பிள்ளையாயிற்றே என[illegible] மயங்குகிறேன்" என்றாள்.

[illegible] 18645 [illegible]

வித்துவான்:—" அதுபற்றி யோசிக்கவேண்டாம். உனக்குத் தெரிந்தது தேன் ", என்றான்.

வேலைக்காரி:—ஐயா !

" வட்டமதி போலிருக்கும் வள்ளிக் கொடிதாவும்,
கொட்டுவார் கையினின்று கூத்தாடும்—சட்டால்,
அரகரா என்னுமே அம்பலசோ மாசி !
ஒருநாள்விட் டேனீ துரை ".

என்னுங் கேள்வியைக்கேட்டாள்.

அம்பல சோமாசியாகிய வித்துவான் நெடுநேரம் இதைப் பதம் பிரித்துப் பிரித்துப் பார்த்து யோசித்தான்; கண்ணைமூடிப் பார்த்தான்; ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தான்; கையைப் பிசைந்தான்; தலையைத் தடவினான். முகத்தை நெரித்து முக்கண்ணனைப்போல் விழித்தான். ஆ ! என்றான் ; ஊ என்றான். சந்தடி செய்ய வேண்டாமென்றான். மௌனஞ் சாதித்தான்; உல் என்றான். ஒன்றும் விளங்கவில்லை. கடைசியாய் மூக்கின்மேல் கையைவைத்துப் பல்லை இளித்தான். பிறகு தைரியம் பண்ணிக்கொண்டு " ஓகோ நீ வம்புதும்புமா பேச வந்தாய் ? உன்வாயில் வந்ததெல்லாம் பாடலாமா ? அப்படி இது பாடலாயிருப்பின், நீயே இதற்குப் பொருள் சொல் " என்றான்— (வரும்)

ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான், கோமளேசுவரன் பேட்டை.

அதுகொண்டு குப்பையேறிக் குறும்பு செய்வதற் கல்ல.

அப்படி செய்யப் புகுவது, " விண்ணுக்கும் மண்ணுக்கும் † வெற்புக்கும் * அற்புக்குமா நான் அடங்கியவன் ; என்னை அடங்காப்பிடாரியென்றறியீரோ "? என்று ஆரவாரித்து வெளிப்பட்ட கங்காதேவி, சிவபெருமானுடைய ஜடாமகுடத்தைக் கண்ட மாத்திரத்தில், பேச்சுப் பேச்சென்னும் பெரும் பூனையைக் கண்டு கீச்சுக் கீச்சென்ற கிளிபோலடங்கியொடுங்கியதை யொக்கும்.

கல்லாதவரிடத்திலுங் கற்றவரை வெல்லத் தகுந்த கருவி ஏதாவதிருக்கலாம்—பெரிய சூரியனைச் சிறிய குடையானது மறைக்கவில்லையா ? மகத்தான மலையைச் சின்ன உளி தகர்த்தாட்டவில்லையா ? இது சம்பந்தமாக ஒருசிறு கதை சொல்லுகிறேன் கேளுங்கள்:—

கம்பனென்னுங் கவிச்சக்ரவர்த்தி ஒருவரிருந்தார். அவருடைய பிரக்யாதி மிகவும் பெரியது. எவனாவது சிறந்த வித்துவானென்று தன்னை மெச்சிக்கொண்டு ஏதாவதொரு நாலடிப்பாடிக்கொண்டு வந்தால், அவனை

† வெற்பு—மலை * அற்பு—பக்தனுடைய அன்பு.

உண்மைநடைப்பிடி—என்ற உபதேசப்படி எவனும் உண்மையே பேசவேண்டும். உண்மைபேசத் தவறினவன் உயர்ந்தவனாகான், அவன் இழிஞனேயாவன். அவன் படிப்பிலும் பணத்திலும் மற்றும் எந்த யோக்கியதையிலும் உயர்ந்தவனாயிருந்தாலும் சரி. படிப்பு, பணம் முதலியன எதுவும் இல்லாத தாழ்ந்த குலத்தானாயிருந்தாலும் உண்மை கடைப்பிடித்தொழுகுவானானால் அவனையே எல்லோரும் கொண்டாடுவார்கள். அவனிடம் கடவுளின் திருவருள் விளங்கும். அவன் போனவிடமெல்லாம் புகழ்பெறுவான். அவனுக்குப் பெரியோர்களும் கடவுளும் துணைசெய்வார்கள். இதனாலேதான்—திருவள்ளுவ நாயனாரும்—

" மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை—" என்றார்.

நோக்கி உலகம், 'நீ கம்பனோ?', 'இது என்ன கம்ப சூத்திரமோ?' என்று பேசுவதை நீங்கள் கேட்டிருக்கலாம். அத்துணைப் பெருமைவாய்ந்த கம்பர் வீட்டிலுள்ள அற்புதமான கட்டுத்தறியும் கவிபாடும். அப்படிப்பட்ட வித்வசிகாமணியை **கிள்ளுக்கீரை**யாக நினைத்து, **அம்பல சோமாசி** என்னும் ஒருவித்வான் அவரிடம் தர்க்கஞ் செய்யவந்தான். அவன் வந்த சமயமோ அருணோதய காலமாயிருந்தது. அப்போது கம்பர்வீட்டு வேலைக்காரி வீதியில் சாணமிட்டுக்கொண்டிருந்தாள். அவளை நோக்கி, வந்தவித்வான் "கம்பர் என்ன செய்கிறார்?" என்று கேட்டான். அவள் "ஏன்?" என்றாள். "நான் அவரிடம் தர்க்கிக்க வந்தேன்" என்று அவன் பதிலளித்தான். "அப்படியா? நீ என்னை முதலில் பார்த்தபடியால், நான் கேட்கும் வினாவிற்கு விடை கொடுத்த பிறகுதான், நீ கம்பரைக்காணமுடியும்" என்று வேலைக்காரி கூறினாள். அதற்கந்த வித்துவான் நகைத்து "நீயா என்னைக் கேள்வி கேட்கப் போகிறாய்; இதுவும் ஒரு வேடிக்கைதான். எங்கும் பரந்து பொங்கித் ததும்பி வகவுருவாயிருக்கும் என் புகழ், உன் செவிக்குமட்டும் எட்டாமலா போயிற்று; சபாஷ்—நீ என்ன செய்வாய்—பாவம்; உனக்குரிய பூஷணமாகிய பேதைமைத்தன்மை உன்னை அவ்வாறு சொல்லவைத்தது. நீ பெண்பாலாயிருந்தும் துணிந்து என்னை அவ்விதம் கேட்டமையால், நான் உனக்குச் சில நியாயங்கூறுகிறேன்.

உலகத்தில் வினாவிடை என்பவை எத்தன்மையாயிருக்கின்றன என்பதை நீ அறியமாட்டாய். நான் விரித்துரைக்கிறேன் கேள்—வினாவகையில் அறிந்து கேட்

வித்தைபயிலச் சித்தஞ்செலுத்து.

குழந்தைகளே! சிறுவர்களாயிருக்கும் பொழுதே நீங்கள் ஒவ்வொரு வித்தையையும் ஆவலுடன் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த வித்தை பயனற்றதென்று நினைத்து ஒன்றையும் தள்ளுவதுகூடாது. **களவும் கற்றுமற** என்பது பழமொழியல்லவா. பிறகு உங்கள் வாழ்நாட்கள் முழுவதும் நீங்கள் சரியாய்க் கவனித்து வருவீர்களானால் ஒவ்வொரு வித்தையையும் உபயோகிக்கச் சரியானகாலம் நேரிடுவதைக் கண்டு நீங்கள் மகிழ்வதோடு அதனாலே நல்ல பயனையும் அடைவீர்கள்.

ஒருவன் கதைசொல்வதிலும் பாடுவதிலும் சமர்த்தன். அவனொருசமயம், ஏதோ ஒருகுற்றத்திற்காளாய்த் தண்டிக்கப்பட்டான். அவன் சிறைச்சாலையிலிருந்த போது அவனை மற்றக் குற்றவாளிகளுடன் சேர்த்து வேலைசெய்ய விடுவார்கள். அப்பொழுது அவன் சிலசமயம் பாடுவான்; சிலசமயம் கதைகள் சொல்லுவான். இதனால் சிரமமின்றி எல்லோரும் வேலையைச் செய்துமுடிப்பார்கள். இவனும் தன் வேலையைச் சிரமமின்றிச் செய்து முடிப்பான். இவனை எல்லோரும் புகழ்ந்து பேசுவார்கள். சில சமயம் இவனுடைய வேலையைச் சிலர்செய்து விடு

வதுமுண்டு. சிறைச்சாலை அதிகாரியும் இவனைப் பாடும்படிகேட்டு ஆநந்தமடைந்து இவனிடம் இரக்கம் பாராட்டி வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுப்பதுண்டு.

இதனால் சந்தோஷமடைந்த நமது பாடகன், "ஆகா! ஈசுவரனுடைய கருணையினால் நமக்கு இந்த யோக்கியதையேனும் இருந்ததல்லவா? இதனாலல்லவா கஷ்டப்பட வேண்டிய இந்த இடத்திலும் நமக்குச் சுகமே கிடைத்திருக்கிறது. மனிதன் எப்பாடு பட்டேனும் வித்தைகளைப் பயிலல்வேண்டும். எதையும் அலட்சியம் செய்வது கூடாது" என்று எண்ணி மகிழ்வான்.

ஒருவனுக்குப் புத்தகப் படிப்புமட்டும் போதாது. உலகஞானமும் வேண்டும். உலகஞானமென்பது உலகத்தில் பழகியே வரவேண்டும். வீட்டிற்குள்ளிருந்தபடி அடைவதற்காகாது. படித்திருந்தலற்றை உலகத்தாரோடே பழகி அறியவேண்டும். ஜனங்களோடு பழகுவது எளிதானகாரியமல்ல. வெகுஜாக்கிரதையாய்ப் பழகவேண்டும். "இணக்கமறிந்திணங்கு" என்று கூறியிருக்கிறார்களல்லவா பெரியோர்கள். சாஸ்திரங்களைப் படிப்பதில் எவ்வாறு ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமோ அவ்வாறே மனிதர்களுடன் பழகுவதிலும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். அநேகர் இந்த இரகஸ்யங்களைத் தெரிந்து கொள்ளாமலேயிருந்து காலங்கழித்துப் பிறகு வயது சென்றபோது அறிவீனராய்க் கஷ்டப்படுகிறார்கள். அநேகர்க்கு வயதுமாத்திரம் நிறைந்திருக்கும். அவர்களுக்கு ஒரு சிறுவனுக்கிருக்கும் அறிவுகூட இருக்காது.

உலகத்தோடு பழக நாம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய அம்சங்கள் சிலவுண்டு.

ஹாஸ்யம்

ஒற்றைக்கண் உத்தமிக்கும் ஒற்றைக்காலுத்தமனுக்கும் நடந்த ஒற்றுமை விவாகம்.

ஓரூரில் ஒரு வேளாளனிருந்தான். அவனுக்குத் தெய்வானுக்கிரகத்தால் ஒரே ஒரு பெண்குழந்தை பிறந்தது. அந்தக்குழந்தைக்கு ஒரு கண்ணில்லை. அப்படியிருந்தாலும் அப்பெண்மகவை அவன் மிகவும் அன்புடன் வளர்த்து வந்தான். யுக்தவயது வந்ததும் அப்பெண்ணுக்கு சேஷையிட ஏற்றவரனொருவனை எங்குந் தேடத் தொடங்கினான். தக்க வரன் கிடைக்கவில்லை. ஒரு பிடியாளைப்பிடித்து "அப்பா! நீதான் இக்குழந்தைக்கு விளக்கேற்றி வைக்கவேண்டும். என்னால் முடியவில்லை. அந்தப் புண்ணியத்துக் கேற்ற கண்ணியம் உனக்குப் பகவான் கொடுப்பார்" என்று காலில் விழாத குறையாக வேண்டிக்கொண்டான். அந்த ஆள் வெகு நேரம் யோசித்துக் கடைசியில் ஒத்துக்கொண்டான். இப்படி ஒத்துக்கொண்ட வேலையை முடிவு செய்ய, எப்படியோ புலம் பிடித்து அவன் போமூருக்குப் போனான். அங்கே மேற்சொன்னது போல் மற்றொரு வேளாளனுக்கு ஒரே ஒரு ஆண் சந்ததியிருந்தது. அதற்கு ஒரு காலில்லை. ஆயினும் 'காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு' என்கிறபடி அதை அருமையாய் அந்த வேளாளன் பரிபாலித்து வந்தான். வாலிபம் பெற்றதும், திருமணம் புரிய, உரிய பெண்ணை எங்கெங்குந் தேடிக்கொண்டிருந்தான்.

புலங்கண்டுபோன ஆசாமி இந்த வேளாளனைப் பார்த்து "ஐயா! தங்கள் குமாரனுக்கு இன்னும் விவாகமாகவில்லை யென்று கேள்விப்பட்டேன். ஏன் அப்படி பராமுகமாயிருக்கிறீர். என் வசத்தில் தக்க பெண் உண்டு; குணமணி யென்றால் அதற்குத்தான் தகும். வித்தியாச புத்தி கிடையாது; எதற்கும் ஒரே கண் தான்" என்றான். பிள்ளைவீட்டு வேளாளன், அப்படித்தான் இருக்க வேண்டும். என்னுடைய பிள்ளையோ வீட்டை விட்டு வெளியே வரமாட்டான். தானுண்டு தன் படிப்புண்டு. அதவா வெளியே போகவேண்டுமானால் கட்கதண்டமில்லாமல் போவதில்லை. அதுதான் அவனுக்கு உயிர்த்துணை. இதோ இருக்கிறான் பாரும்" என்று பிள்ளையைக் காண்பித்தான்.

வந்த ஆசாமி பிள்ளையைப்பார்த்து "பேஷ்—'கந்தைக் கேற்ற மொந்தை' என்றும் 'சண்டிக்குதிரைக்கு மொண்டிச் சாரதி' என்றும் சொல்லுவது வீண்பாமா?" என்று தனக்குள் எண்ணிக்கொண்டு பெண் வீட்டாரிடம் போய் "உங்கள் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். நல்லபிள்ளை கிடைத்து விட்டான். குலங்கோத்திரம் பார்க்கவேண்டியதில்லை. ஒரே கால் தான்" என்றான். "அதுதான் சரி. 'இலைப்பழுப்பானாலும் குலப்பழுப்பாகாது'" என்று சந்தோஷப்பட்டு, பெண் வீட்டாரே எல்லாச் செலவுஞ் செய்து, கொட்டுண்டுபோன கூந்தலழகியர் கொப்பிதட்ட, ஊமையர் பாட, செவிடர் கேட்க, மொண்டியர் நடிக்க, கையற்ற காலநேமி மத்தளங்கொட்ட வெகு விமரிசையாய் விவாக மஹோற்சவத்தை ஒற்றைக்கண் உத்தமிக்கும் ஒற்றைக்கால் உத்தமனுக்கும் நிறைவேற்றினார்கள்.

(1) நல்லவர்களைக்கண்டு அவர்களோடு பழக வேண்டும்.

(2) தீயவர்களானால் அவர்களை விட்டு விலகவேண்டும்.

(3) அவர்களோடு பகையுண்டாகும்படி எந்தக் காலத்திலும் நடந்துகொள்வதுகூடாது.

(4) நீங்கள் பழகும் ஒவ்வொரு மனிதனுடைய பேச்சையும் நடவடிக்கைகளையும் அவனுடன் சேர்ந்தவர்களையும் நன்றாய்க் கவனிக்கவேண்டும்.

(5) எங்கேபோனாலும் யாரைக்கண்டாலும் முதலில் உங்கள் வாயைத்திறந்து பேசுவதுகூடாது. அவர்களை முதலிற் பேசவிட்டு அவர்கள் கருத்துணர்ந்து பின்பு பேசவேண்டிய அவசியமிருந்தால், பிறருக்கு எந்த விதத்திலும் வருத்தம் நேராதபடி பேசி உங்கள்மீது அவர்கட்கு அன்பும் இரக்கமும் உண்டாகும்படி விடைகொள்ள வேண்டும்?

(6) எல்லோருக்கும் மேலானவர் கடவுள் என்பதையும் அவர் சித்தப்படி யாவும் நடக்குமென்பதையும் நாம் அவர் ஆட்டுவிக்கும் பதுமை என்பதையும் நினைவில் வைக்கவேண்டும்.

கவனிக்கவேண்டிய பழமொழிகள்.

1 சிறுமையில் கல்வி சிலையிலெழுத்து.

2 கண்டிப்பதிலும் கணக்குவேண்டும்—அடிப்பதிலும் அளவு வேண்டும்.

3 சிம்பிலே வளையாதது கொம்பிலே வளையுமா?

4 சான்பிள்ளையில் சரிப்படாதவன் வீண்பிள்ளையாவானேயன்றி வேறில்லை.

5 பணமானது எத்தனை நண்பர்களைக் கடன் வாங்குகிறதோ அத்தனை பகைவர்களையும் கடன் வாங்கும்.

நிலைமைக்குத் தக்க சுகம்.

ஒரு வேந்தன் ஒரு காட்டிற்கு வேட்டைக்குப் போனான். அங்கு ஒரு வேடமாது பிரசவித்து உடனே அங்கிருந்த சில ஈச்சம்பழங்களைப் பறித்துத்தின்றுவிட்டுக் குழந்தையை அங் கோடிய ஒரு மலையருவியில் கழுவி எடுத்துக் கொண்டு தன் குடிசைக்குப் போய்விட்டாள். இதனை அரசன் பார்த்து ஆச்சரியமடைந்து "நம் வீட்டில் யாரேனும் பிரசவிப்பதா யிருந்தால் அவர்களுக்குக் கணக்கில்லாமல் உபசாரங்களைச் செய்கின்றோம். அப்பொழுதும் இப்படிச் சுலபமாய்ப் பிரசவமாவதில்லை. உபசாரத்தினாலே நன்மையில்லையென்று தெரிகிறது. இப்படிச் சாதாரணமாயிருந்துவிட்டால் எல்லாம் சரியாய் நடக்கும் போலும்" என்று எண்ணிக்கொண்டு அரண்மனைவந்து சேர்ந்தான்.

பிறகு அடுத்த வருஷம் அரசனுடைய மனைவி கர்ப்பமடைந்தாள். பிரசவ சமயம் நெருங்குகையில் அரசன் பணிப் பெண்களையும் மற்றவர்களையும் அழைத்து "இராணிக்கு இச்சமயத்தில் யாரும் எந்த உபசாரமும் செய்ய வேண்டாம்" என்று கட்டளையிட்டான். அவர்கள் அவ்வாறே யிருந்துவிட்டனர். இது இராணிக்குத் தெரிந்தது. இராணி உடனே நந்தவன வேலைக்காரர்களைக் கூப்பிட்டு "இன்றுமுதல் நீங்கள் இந்த நந்தவனத்திலுள்ள செடி கொடிகளுக்குச் சிறிதும் தண்ணீர் விடவேண்டாம். இது என் உத்தரவு" என்றாள். வேலையாட்கள் அவ்வாறே இருந்து விட்டனர். இரண்டு மூன்றுநாளில் செடிகொடிகளெல்லாம் வாடிப் போயின.

அப்பொழுது அரசன் நந்தவனத்துக்குப் போனான்.

செடி கொடிகளெல்லாம் வாடி யிருப்பதைக் கண்டு வேலையாட்களைநோக்கித் தோட்டம் இப்படி யிருப்பதன் காரணமென்னவென்று கேட்டான். வேலையாட்கள் இராணியின் கட்டளையைக் கூறினார்கள். அரசன் கேட்டு வியப்படைந்து, அந்தப்புரம்போய் மனைவியைக்கண்டு "நந்தவனத்துக்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டாமென்று ஏன் உத்தரவுசெய்தாய்?" என்றுகேட்டான். இராணி, நகைத்து, "நாதா! காட்டிலே வளருகிற செடி கொடிகளுக்குத் தண்ணீரிறைத்தல் முதலிய உபசாரம் யார் செய்கிறார்கள்? அவை தாமே வளரவில்லையா? இவைகளும் அப்படி வளரட்டுமே என்று கருதி இவ்வாறு உத்தரவிட்டேன்" என்றாள்.

இதைக்கேட்டதும் அரசனுக்குத்தான் இராணியின் பொருட்டுச்செய்த உத்தரவு நினைவிற்கு வந்தது. அப்படி உத்தரவு செய்தது முழு மூடத்தனமென்பதைக்காட்ட இராணி இவ்வாறு செய்திருக்கிறாள் என்று தெரிந்து கொண்டு வெட்கமடைந்து, சற்றுநேரம் சும்மாவிருந்து பிறகு மனைவியினிடம் தான் காட்டிலே கண்ட காட்சியைக்கூறி "அதனால்தான் அப்படிப்பட்ட கட்டளை பிறந்தது; அது தவறு என்பதை நீ இப்போதுணர்த்தினாய்! உன்மதி பெரிது. பெண்மணி! உலகத்தில் அவரவர் தாரதம்மியத்திற்கேற்றபடி உபசரணை முதலியன ஏற்பட வேண்டுமென்பதை உணர்ந்தேன்" என்று தெரிவித்து, உடனே இராணிக்கு வேண்டிய உபசரணைகளைக் கிரமப்படி செய்ய பணிப்பெண்களுக்கு உத்தரவிட்டான்—இராணியும் நந்தவனத்துக்குத் தண்ணீர்பாய்ச்சும்படி வேலையாட்களுக்கு உத்தரவிட்டாள்.

வியாபாரி குதிரையை அறிந்தான்
குதிரை வியாபாரியை யறியவில்லையே!

வடதேசத்தில் முன்காலத்தில் ஒரு வித்வானிருந்தார். அவர் தரும சாஸ்திர முழுவதும் நன்றாய் உணர்ந்தவர். ஆகையால் அவர்க்குத் தரும சாஸ்திர நிபுணர்—சந்திரசேகர பாபு என்கிற பெயர் வழங்கிவந்தது. சந்திரசேகரபாபு நியாயா நியாயங்களைப் பகுத்தறிய வல்லவர். அவர் ஒரு சமயம் தம் வீட்டில் சாவகாசமாய் வீற்றிருக்கையில் ஒருவர் வந்தார். அவரிடம் பேசிக்கொண்டிருந்த பொழுது அவர், உதயபுரியில் ஒரு நியாயாதிபதி யிருப்பதாகவும் அவர் எப்படிப்பட்ட வழக்குகளையும் சாட்சிகளேனும் தஸ்தவேஜுகளேனுமில்லாமலே உண்மையுணர்ந்து நியாயமான தீர்ப்புச் செய்கிறார் என்றும் கூறிப்போனார்.

சந்திரசேகர பாபுவுக்கு உடனே உதயபுரிபோய் அந்த நியாயாதிபதியினுடைய திறமையைப் பார்க்கவேண்டுமென்கிற அவா உண்டாயது. பிறகு ஒருநாள் அவர் ஒரு வியாபாரியைப்போல் வேடம்பூண்டு ஒரு குதிரையின்மேலேறிக்கொண்டு உதயபுரியை நாடிப்போனார். போகும் வழியில் இன்னொருவர்த்தகன் இவரைச் சந்தித்தான். அவன் இவரைக்கண்டதும் பணிந்து, "ஐயா! நானும் உதயபுரிதான் போகின்றேன். நெடுந்தூரம் கால்

நடையாகவருகிறேன். கால்வலிக்கிறது. என்னையும் தமது குதிரையின்மீது ஏற்றிக்கொள்வீர்களானால் தமக்குப் பெரும்புண்ணியமுண்டு" என்றான். இதைக்கேட்டதும் பாபு மனமிரங்கி, "வாரும் ஏறிக்கொள்ளும் எனக்குப் பின்னே" என்றுகூறி இடங்கொடுத்தார். அந்த வியாபாரி உடனே சந்தோஷத்துடன் அவர்க்குப்பின்புறம் ஏறி உட்கார்ந்துகொண்டான்.

பாபு குதிரையை நடத்திக்கொண்டுபோனார். பிறகு ஒரு ஜாமத்துக்கெல்லாம் குதிரை உதயபுரிகோட்டைவாயிலுக்கருகே போய்ச்சேர்ந்தது. பாபு, இப்பொழுது வியாபாரியைக் குதிரையி லிருந்திறங்கும்படி சொன்னார். வியாபாரி "நானேன் இறங்கவேண்டும்? நீர்தான் இறங்கவேண்டும்." என்றான். இதைக்கேட்டதும் பாபு, "இது என்ன நியாயம்! இது யாருடைய குதிரை? உபகாரஞ் செய்தவனுக்கு அபகாரமா? நல்லவர்களுக்குக் காலமில்லை யென்பது சரியாயிருக்கிறதே! சை, குதிரையை விடு" என்றார். வியாபாரி, "ஐயா இது ஒரு சாமர்த்தியம் போலும்! நல்லது. தெருச் சிரிக்க வேண்டாம். நல்ல வேளையாய் நாம் நியாயா நியாயம் கண்டுபிடித்துத் தீர்ப்புச் செய்யும் நியாயாதிபதி யிருக்குமிடத்துக்கு வந்துவிட்டோம்: நாமேன் இங்கே சச்சரவுசெய்து கொள்ளவேண்டும். உண்மையைக் கண்டுபிடிக்கும் நியாயாதிபதியிடம் செல்வோம்" என்றான்.

இதைக்கேட்டதும் பாபு, "இருக்கட்டும்; நாமேன் இந்தப் பொய்யனோடு பேசவேண்டும். நியாயாதிபதி உண்மை யுணரும் நிபுணரா யிருக்கும்போது நமக்கென்ன பயம்! நாம் அவரைப் பரீக்ஷித்து அவருடைய புத்தி

நுட்பத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று வந்தது ற்கேற்ப இவனும் வழக்குக்கு இழுக்கின்றான். இது கடவுளுடைய திருவுளம் போலிருக்கிறது" என்று கருதி, "சரி அவ்வாறே செய்வோம். எல்லாவற்றையும் அறியவல்ல தெய்வம் இருப்பது உண்மையானால், உண்மை விளங்கட்டும்; இல்லையேல் நீ கூறும் பொய் விளங்கட்டும். இதனால் நானோர் உண்மையுணர்வேன்" என்றார். பிறகு இருவரும் நியாயாதிபதியினிடம் சென்று முறையிட்டார்கள்.

நியாயாதிபதி, "சரி உங்களுடைய வழக்கை நாளைய தினம் விசாரித்து முடிவு செய்கின்றேன். அது வரையில் குதிரை இங்கேயே இருக்கட்டும். போய் வாருங்கள்" என்று உத்தரவிட்டார். அவர்கள் அவ்வாறே போய் மறுநாள் நியாயஸ்தலத்திற்கு வந்தார்கள். நியாயாதிபதி "நீங்களிருவரும் என்னோடு இப்போது நமது குதிரைலாயத்திற்கு வாருங்கள்" என்று தம் முன் அவர்களைக் குதிரைலாயத்திற்கு அழைத்துக் கொண்டு போய் முதலில் பாபுவைப்பார்த்து, "இங்குள்ள குதிரைகளில் உம்முடைய குதிரை எது என்று அதனிடம் போய்த் தொட்டுக் காட்டும் பார்க்கலாம்" என்றார். பாபு அவ்வாறே பல கொட்டிலுக்குள்ளும் நுழைந்து பார்த்து ஒரு குதிரையினிடம்போய் நின்று அதைக் கையினாலே தொட்டு "இதுதான் என் குதிரை" என்றார். பிறகு வியாபாரியை அழைத்து "உமது குதிரை எது?" என்று கேட்டார். வியாபாரியும் அந்தக்குதிரையையே தொட்டுக் காட்டினான். பிறகு நியாயாதிபதி அவர்களிருவரையும் நியாயஸ்தலத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் நிறு

த்தி, "குதிரை வியாபாரியினுடையதல்ல. பாபுவினுடையது! வியாபாரி பொய் வழக்குக்கொண்டு வந்தபடியினால் இவனுக்கு இரண்டு வாரக் கடுங்காவல் தண்டனை விதித்திருக்கிறோம்" என்று சொன்னார்.

இந்தத்தீர்ப்பைக்கேட்டதும் பாபு, நியாயாதிபதியை நோக்கி, "பிரபுவே, ஒரு மனுவிருக்கிறது. நாங்களிருவரும் குதிரையைச் சரியாகக் காட்டியிருக்கும்போது என் பக்கம் தீர்ப்புச் சொன்னதற்குக் காரணம் என்ன? தயை செய்து தெரிவிக்க வேண்டுகிறேன்" என்றார். நியாயாதிபதி, "நல்லகேள்வி கேட்டீர்! சந்தோஷம்! வியாபாரி குதிரையை அறிந்து கொண்டார். ஆனால் குதிரை தன் பக்கத்தில் வரக்கண்டும் அவனை அறிந்து கொள்ளவில்லை! ஆனால் நீர் கிட்டநெருங்கும்போதே அது உம்மைத் தெரிந்துகொண்டது. இதனால் குதிரை உம்முடையதென்றுணர்ந்தேன்" என்றார்.

இதைக்கேட்டதும் பாபு, பரமசந்தோஷமடைந்து, நீதிபதியின் புத்தி சாதுரியத்தைப் புகழ்ந்து பேசி அவர்க்குப் பலவந்தனம் செய்து விடை பெற்றுத் தமது குதிரையின் மீதேறிக்கொண்டு தம் ஊருக்குப் பிரயாணமானார்.

ஆகா:—நீதிபதியின் புத்தி நுட்பத்தைப் பாருங்கள். நீதி உணர்ந்து உணர்ந்தபடி நடக்கும் புத்திமான்களுடைய உள்ளத்திற்குச் சகல உண்மைகளும் விளங்கும். அவர்களுடைய உள்ளம் கடவுளின் ஸந்நிதானத்திற்கொப்பாகும். அங்கே பொய் நிற்காது.

"தந்தைதாய் தம்மேல் தயையில்லாப் புத்திரன்றான்
வந்துதித்தே னீண்டவன் மாய்ந்திடிலென்—அந்தமிலாப்
புற்றில் பிறந்திலையோ புன்சிதலை மாய்ந்திலையோ
மற்றதொக்கும் வேமா மதி."

Never put off till tomorrow what you can do to day

இன்றைக் கென்பதும் நாளைக்கென்பதும்
இல்லையென்பதற் கடையாளம்.

ஓர் ஊரில் நாகன் என்று ஒரு பையன் இருந்தான். இவன் மந்த சுவபாவமுடையவன். எதையும் ஒரு முறைக்கு இரு முறை படிக்கவேண்டும்; அல்லது கேட்கவேண்டும். இல்லாவிட்டால் இவன் புத்திக்கு அது எட்டாது. அதனுடன் இவனுக்கு எடுத்தவைகளி லெல்லாம் சந்தேகம் அதிகம் உண்டாகும்; நிச்சயபுத்தி கிடையாது. ஒரு காரியத்தை யோசித்துத் துவக்கவு மாட்டான் "எண்ணித்துணிக் கருமம்" என்பது யார்பொருட்டுப்பிறந்ததோ என்றிருப்பான். தொடங்கியதை முடிக்கும் இயல்பும் இவனுக்குக் கிடையாது. நிச்சய புத்தியும், விடா முயற்சியும் இருந்தாலல்லவா துணிந்தகருமம் முடிவு பெறும். எப்போதும் "ஒன்றே செய்யவேண்டும், அன்றே செய்யவேண்டும் அதை நன்றே செய்யவேண்டும்," என்ற பெரியாரின் உபதேசம் நமது நாகனின் மூளைக் கெட்டுவதில்லை.

இத்தகைய குணம் வாய்ந்த நாகன் பள்ளியில் படிக்கும்போது மறுநாள் பாடத்தை முதல் நாள் இராத்திரி படிப்பதற்காக வந்து விளக்கண்டை உட்

கார்ந்து புத்தகத்தைப் பிரித்துப் பார்க்கும் போதே "விடியற்காலம் நாலுமணிக்கு எழுந்திருந்து படித்து விடலாம். இப்போது படுத்துக் கொள்வோம்" என்று படுத்துக்கொள்வான்—விடியற்காலம் விழித்துக் கொள்வதே கிடையாது—"வைகறைத்துயிலெழு" என்ற உபதேசம் இவன் காதுக் கெட்டியிருந்தபோதிலும் அதை அநுபவத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்கிற எண்ணமே இவனுக்கில்லை. இருந்தால் விழிப்பு தானே உண்டாய் விடுமல்லவா? நிற்க, விடியற்காலம் நாலுமணிக்கு எழுந்திருப்பது மிகவும் உத்தமம்—எழுந்திருந்து வேலையைக் கவனித்தால் அநேக அரிய பெரிய காரியங்களைச் சாதிக்கலாம். உலகத்தில் பெரியவர்களுடைய சரித்திரங்களும் அவர்கள் விடியற்காலம் எழுந்து வேலைசெய்து வந்திருப்பதாகவே தெரிவிக்கின்றன. (Deanswift) டீன்ஸ்விப்ட் என்பவர் "விடியற்கால நேரத்தில் படுக்கையில் படுத்து நித்திரைசெய்தவர்களில் ஒருவராவது பெரிய நிலைமையையாவது, எல்லாராலும் புகழப்படும் தன்மையையாவது அடைந்திருப்பதாகத் தெரியவில்லை" என்று எழுதுகிறார். (Peter the great) பீடர்-தி-கிரேட், என்பவர் "நான் என்னுடைய ஆயுளை எவ்வளவுக் கெவ்வளவு நீடித்ததாகச்செய்ய விரும்புகிறேனோ அவ்வளவுக் கவ்வளவு கொஞ்சமாகத் தூங்குகிறேன்" என்று தன் ஆயுளின் அபிவிருத்திக்கு அதிகத்தூக்கமில்லாமையே காரணம் என்று சொல்லுகிறார். மற்றும் (Doddridge) டாட்ரிட்ஜ் என்பவர் தாம் எழுதிய புத்தகங்கள் எல்லாம் விடியற் காலத்தில் எழுந்ததனாலேயே முடிந்ததென்றும் ஒருவன் பிரதிதினம் விடியற்காலம் 5-மணிக்கு எழுந்

திருப்பதற்கும் 7-மணிக்கு எழுந்திருந்து வேலை செய்வதற்கும் உள்ள வித்தியாசம் 2-மணி உள்ளதென்றும் ஒரு நாளைக்கு 2 மணி வீதம் 40 வருஷம் உயிருடன் இருந்து இவ்விதம் வேலைசெய்வானானால் 4 வருஷ ஆயுளை அதிகமாகப்பெற்றவனாகிறான்—என்றும் எழுதுகிறார். இன்னும் அநேகம் பெயர்கள் இவ்விதமே அபிப்பிராயப்படுகிறார்கள்—

நாகனைக்கவனிப்போம்—அப்படித்தப்பி ஒருநாள் விடியற்காலம் எழுந்தபோதிலும் 'காலமே படித்துக்கொண்டால் போகிறது—இப்போது தூக்கத்தை வீணாக்குவானேன்' என்று மறுபடியும் நித்திரைபோய் விடுவான். எப்போதும் விடியற்காலம் ஒருமுறை விழித்துக்கொண்டு மறுபடியும் தூங்கினால் சீக்கிரம் எழுந்திருக்க முடியாது. விடிந்து ஒரு மணியோ, இரண்டு மணியோ ஆய்விடும். அப்போதுதான் சோம்பேறிகளுக்குத் தூக்கம் நன்றாய்வரும்—இப்படி நாகன் விடிந்து ஏழல்லது எட்டுமணிக்கு எழுந்து காலைக்கடன்களை—காலைக்கடனில் காலையில் கடவுளைத் தொழுவதும் சேர்ந்தது—கடவுளைத் தொழுவது நீங்கலாக மற்றவைகளை அவசர அவசரமாக முடித்துவிட்டுக் காபி உப்புமா சாப்பிடுவான். சாப்பிடும் போதே பாடம்படிக்காததை நினைத்துக்கொண்டு "மணி அடிக்க ஒருமணிநேரம் முன்னாலேயே பள்ளிக்கூடத்திற்குப் போய் உட்கார்ந்து படித்துவிட்டால் போகிறது" என்று தீர்மானித்துக் கொண்டு-எழுந்து உடுப்பு அணிந்துகொண்டு பள்ளிக்குப் புறப்படுவான். புறப்பட்டு போகிறவழியில் யாராவது சோம்பேறிகள் கோலிவிளையாடிக் கொண்டிருந்தால் அதைப்

பார்த்துக்கொண்டே நின்று விடுவான். பள்ளிக்கூடத்திற்குப்போக நேரம் ஆனதுகூடத் தெரியாது. யாராவது பள்ளிக் கூடத்து பையன்பார்த்து அவனுடைய தோளைத் தட்டி நாழிகை யாகவில்லையா இங்கு நின்றுகொண்டிருக்கிறாயே என்று கேட்டால் "ஓகோ! மறந்தேபோய் விட்டேன். ஆட்டம் சுவாரஸ்யமா யிருந்தது அப்படியே இருந்து விட்டேன்" என்று சொல்லிப் பிறகு பள்ளிக்குப் போவான். கோலி, சீட்டு முதலியன ஆடும்போது ஆடுகிறவர்களைக் காட்டிலும் பார்க்கிறவர்களுக்குத்தான் அதிக உற்சாகம். இது பற்றி உண்மையாய் நடந்த விஷயம் ஒன்று இப்போது ஞாபகத்துக்கு வருகிறது—ஒரு சமயம் எட்டுப்பேர் ஓரிடத்தில் உட்கார்ந்து சீட்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைச் சுற்றிலும் வேடிக்கை பார்க்கிறவர்கள் 12 பேர் உட்கார்ந்தனர். சீட்டாடுபவரில் ஒருவர் ஒரு சீட்டுத் தப்பியாடிவிட்டார். அவர் பக்கத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர் உடனே "உஸ் கெட்டுதே காரியம்" என்று சொல்லி உதட்டை மடக்கிக் கையை உதறினார். உதறிய வேகத்தில் அவருடைய கை விரலில் அணிந்திருந்த வைரமோதிரம் பக்கத்தில் மெய்மறந்து ஆ என்று வாயில் ஈ புகுவதுகூடத் தெரியாமல் வாயைத்திறந்து கொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர் பல்லில் தாக்க மோதிரமும் நசுங்கிப்போய் பற்களில் இரத்தம் கொட்ட இருவருக்கும் பெரியசண்டையாய்விட்டது. வேடிக்கை பார்ப்பதில் இந்த வகுப்பைச் சேர்ந்தவன் நமது நாகன்.

அப்படி நாகன் சீக்கிரமாகப் பள்ளிக்கூடம் போன நாட்களில் ஏற்கனவே பள்ளிக்கூடத்திற்கு விளையாடுவதற்

கென்றே முந்திவந்திருக்கும் பையன்கள் இவனைத் தொந்தரைசெய்து விளையாடக் கூட்டிக்கொண்டு போய்விடுவார்கள். நாகனும் ஐந்து நிமிஷம் விளையாடிவிட்டுத் திரும்பிவிடலாமென்று போவான். மணியடிக்கும் வரையில் திரும்பமாட்டான். மணியடித்ததும் வகுப்பில் வந்து உட்காருவான். சுவானங்களுக்கு (நாய்) பூர்வ ஞானம் வருகிறமாதிரி பாடம்படிக்கவில்லையே யென்கிற ஞாபகம் இப்போது வரும்-வந்தென் செய்வது-காலம் மீறிப்போய் விட்டது. சிந்திப்பதற்குக் கூடநேரம் கிடையாது. உபாத்தியாயர் வந்துவிட்டார்!—பாடம் துவக்கியாய் விட்டது. இனி நாகனுக்கு வகுப்பில் கடைசியில் முதல் இடம் குத்தகைதான். இப்படிப்பட்ட முதல் இடத்திலிருந்துகொண்டு உபாத்தியாயர் பாடம் நடத்தும்போதே "தவறிவிட்டது. இருந்தாலும் பாதகமில்லை. நாளை சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை வருகிறது. இந்த இரண்டு தினங்களில் எல்லாப்பாடங்களையும் படித்து விடலாம்" என்று திடப்படுத்திக்கொண்டு வாத்தியார் சொல்லுவதில் கவனமில்லாமல் தன் போக்கிலேயே நிற்பான்: இப்படியாகச் சனிக்கிழமை வந்ததும்-"நாளைமுழுவதும் இருக்கு-நாளைக்கு உட்கார்ந்தால் ஒரே மூச்சு பார்த்துக்கொள்வோம்" என்று நினைத்து விளையாடச்சென்று விடுவான். ஞாயிற்றுக்கிழமை கொஞ்சம் படித்துக்கொண்டிருக்கும்போதே "இன்றையதினம் காவேரியில் வெள்ளம் அதிகம், பாலத்திலிருந்து பையன்கள் குதிப்பார்கள். நாமும்போனால் நன்றாய் விளையாடலாம்" என்ற ஞாபகம் வரும். உடனே 'இப்போது என்னடா அவசரம் எல்லாம் கோடைலீவில் பார்த்துக்கொள்ளலாமடா-லீவுதான் இரண்டு மாதமிருக்கிறதே—பார்த்துக்கொள்வோம்' என்று காவிரிக்குப் போய் விடுவான்.

கோடை விடுமுறையும் வந்தது. இவனுக்கும் படிக்கும் ஞாபகம் வந்தது. ஆனால் லீவுக்கு ஊருக்குப்போனதும் உல்லாசமாகக் காலம் கழிப்பதில் ஞாபகம் செல்லும். அப்போது "எல்லாம் பரீக்ஷை இரண்டுமாதமிருக்க

இராப்பகலாகப் படித்துப் பரீக்ஷைபாஸ் செய்துவிடலாமடா, என்னடா, இது ஒரு பிரமாதமா! பார்த்துக்கொள்ளலாம்" என்று புத்தகங்களைக்கட்டி மூலையில் போட்டுவிட்டு வெளியே போய்விடுவான். பரீக்ஷைக்கு இரண்டுமாதமிருக்கும்போது இரவு பகலாகக் குடுமியில் கயிற்றைக் கட்டிக்கொண்டு படிப்பான். இப்படி ஒரே மூச்சாய்ப் படிப்பதால் யாது பயன்? ஒரு வருஷத்தில் கொஞ்சங்கொஞ்சமாகச் சாப்பிடவேண்டிய சாப்பாட்டை இரண்டு மாதத்தில் சாப்பிடுவதற்கொப்பாக இருக்கிறது. இது சாத்யமா? சாத்யமல்ல. தேக அசௌக்கிய முண்டாய் பரீக்ஷைக்குப் போகமுடியாமல் காயலாவினால் அவஸ்தைப்படுவான். மூன்று குளம் வெட்டினேன் இரண்டு குளம் பாழ்; ஒன்றில் தண்ணீரேயில்லை--என்கிற மாதிரி, இவனே வகுப்பிலேயும் கடைசியில் முதல் பையன்—பரீக்ஷைக்கோ போகமுடிவதில்லை. இவன் எப்படி மேல்வகுப்புக்குப் போவான்? ஒரு வகுப்பில் 3, 4, வருஷம் இருப்பான். கடைசியில் இவன் தகப்பனார் "பையன் படித்ததுபோதும்! எண்ணெய்ச்செலவேயொழிய பிள்ளை பிழைத்தபாடில்லை" என்றும் "இப்படி உருப்படாமல் போவான் என்று தெரிந்திருந்தால் விவசாயத்தொழிலிலாவது போட்டிருப்பேனே, இப்போது இரண்டுங்கெட்டு ஒன்றுக்கு முபயோகமில்லாமற் போய் விட்டானே" என்றும் வருத்தப்பட்டுப் படிப்பை நிறுத்திவிட்டார். நாகனும் "போனாற்போல் வந்தான் புது மாப்பிள்ளை" என்று ஊர்வந்து சேர்ந்தான்.

"நாகன் யோக்கியன். தப்புத்தண்டாவுக்குப் போகமாட்டான்" என்கிற பெயர் இவனுக்குண்டு—இவனுக்கும் படிக்கவேண்டுமென்கிற அவா உண்டு—இருந்தும் நாளைக்குச் செய்துகொள்ளலாம் நாளைக்குச் செய்துகொள்ளலாம் என்று நாளைத் தள்ளிக்கொண்டே போனதினால் இவ்வித நிலைமைக்கு வந்தான். இவனுடைய வாழ்நாள் முழுதும் இப்படியே கழிந்தது. கடைசியில் ஒன்றுக்கும் உபயோகமற்றவனாய் விட்டான்.

குழந்தைகளே! எந்தெந்தக் காரியங்களை எந்தெந்தச் சமயங்களில் செய்யவேண்டுமோ அந்தந்த சமயங்களில் அந்தந்தக் காரியங்களைச் செய்தே தீரவேண்டும்—இன்று செய்யவேண்டியதை இன்றே செய்யவேண்டும்—அப்படிச் செய்யாமல் நாளைக்குச் செய்துகொள்ளலாம் பிறகு செய்துகொள்ளலாமென்று தள்ளிக்கொண்டே வந்தால் பிறகு நாகன் கதிதான் கிடைக்கும். நீங்கள் ஒவ்வொரு நாளும் அன்றன்று பாடங்களை அன்றன்றே படித்து உபாத்தியாயர் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதிலளித்து வகுப்புகளில் கெட்டிக்காரரெனப் பெயரெடுக்க முயலுவீர்களேயானால் சனி ஞாயிற்றுக் கிழமைகளில் பழம்பாடங்களைத் திருப்பிப்படித்தும் விடுமுறை காலங்களில் எல்லாப்பாடங்களையும் ஒரு முறைக்கு இருமுறையாகப் படித்தும் வரலாம். அப்பொழுது ஒன்றும் மறக்காமல் எல்லாம் ஞாபகத்திலிருக்கும்—பரீக்ஷை காலங்களில் குடுமிக் கயிற்றின் சிரமமில்லாமல், தேக அசௌக்கிய முதலிய இடையூறின்றிப் பரீக்ஷையில் தேறுவோமோ என்கிற சந்தேகமுமில்லாமல் நன்றாய் எழுதி உங்களுடைய உபாத்தியாயர்களும், பெற்றோரும், மற்றோரும் உங்களைப் புகழ முதன்மையாகத் தேறுவீர்கள்.

ஆகையால் இன்றைக்குச் செய்யக்கூடியதை நாளைக்காகட்டுமென்று ஒருபோதும் தள்ளிவைக்காதேயுங்கள்.

கல்வியே கருந்தனம்.

வெள்ளத்தாற் போகாது வெந்தணலால்
வேகாது வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
நிறைவொழியக் குறைபடாது
கள்ளர்க்கோ மிகவரிது காவலோ
மிகவெளிது கல்வி யென்னும்
உள்ளத்தே பொருளிருக்க வுலகெலாம்
பொருள்தேடி யுழல்வ தேனோ.

வெந்தணல்—பெரு நெருப்பு; வேந்தர்—அரசர்; உழல்வது—அலைவது.

மாப்பிள்ளையும்—நாய்க்குட்டியும்.

ஒருநாள் அக்பர் சக்ரவர்த்தி பீர்பால் என்னும் விதூஷகரைப்பார்த்து "என்னுடைய சொந்தக்காரரில் என்னிடம் நன்றியில்லாத ஒருவரையும், சொந்தமல்லாதவரில் என்னிடம் நன்றியுள்ளவர் ஒருவரையும் என் முன் கொண்டுவரவேண்டும்" என்று கட்டளையிட்டார்.

பீர்பால் "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லிவிட்டுப்போய். அரசனுடைய மாப்பிள்ளையையும் அரண்மனை வாயில் காத்துக்கொண்டிருக்கும் ஒரு நாயையும் கொண்டுவந்து நிறுத்தி "பிரபோ, தாங்கள் கேட்ட இரண்டும் இதோ கொண்டுவந்திருக்கின்றேன்" என்றார் "எங்கே பார்ப்போம்" என்று அக்பர்சொல்ல, "இவர் நன்றியில்லாதவர்" என்று அரசனுடைய மாப்பிள்ளையாகிய சிறுவாலிபனைக் காட்டி "இவருக்குத் தாங்கள் தங்களுடைய கண்ணான பெண்ணையும் கொடுத்து லக்ஷக்கணக்காகப் பணம், ஏராளமானவரிசைகள், எல்லாவற்றையும் கொடுத்திருந்தபோதிலும் இவருக்குக் கொஞ்சங்கூடத் திருப்தியேகிடையாது. எப்போதும் இதுபோதாது அதுபோதாது என்று தங்கள் பேரில் ஏதாவது குறைகூறிக்கொண்டே இருக்கிறார்" என்றார்.

ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர்.

பெண்களைநோக்கிக் கூறிய புத்திமதி

பெண்ணே!—* உன்னுடைய புருஷனே உனக்குக் கடவுள். அவனே உனக்குப் பிராணன். அவனே உன்னைப் பாதுகாக்கும் கடமை மேற்கொண்டவன். அவனே உன்னைக் கவனிப்பவன். அவனே உனக்கு அரசன். உனக்குத் தலைவனும் அவனேயாவன். உன்னைச் சுகத்தில்வைக்கப் பாடுபடுகிறவனும் அவனே—இப்படிப்பட்ட உன் புருஷன் உன்னிடமிருந்து எதிர்பார்ப்பதென்ன?—(1) அன்பு, (2) நகைமுகம் (3) வணக்கம்—இவை மூன்று மேயாம்.

* இராமாயண இரகஸ்யம். வரகவி. திரு. அ. சுப்ரமணிய பாரதி இயற்றியது. விலை அணா 10. (ஸீதாதேவி நல்ல மனைவி, என்பதில் புருஷனுடைய பெருமையை நன்கு விளக்கியிருக்கிறது காண்க.) வேண்டுவோர் பாலவிநோதினி ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

1039

சில அருமையான புத்தகங்கள்

வள்ளி நாயகி	0	12	0	சிவராத்திரி புராணவசனம்	1	8	0
மகா பாரதம் வசனம். 4-வால்யம்				...	15	0	0
பண்டித நடேசசாஸ்திரியார் ராமாயண வசனம்					15	0	0
சூதசங்கிதாசாராம்ருத வசனம் ...				...	1	8	0
தாயுமானவர் உரையுடன்	4	0	0	ஆநந்தராமாயணம்	5	0	0
ராமகிருஷ்ண விஜயம்	1	4	0	ஔவை அருந்தமிழ்	0	12	0
விவேகானந்த விஜயம்	1	8	0	விநோதரசமஞ்சரி	2	0	0

சில புதிய நாவல்கள்.

தனபாக்கியம் ...	2	0	0	விஜயபாஸ்கரன்	2	0	0
விக்ரமசிங்கன் கோட்டை	1	0	0	ரத்னபுரி ரகசியம்	3	8	0
அதிசய பொக்கிஷம்	1	8	0	வாதசுந்தரம் ...	2	0	0
தனபாலன் ...	2	0	0	கல்பலதா ...	1	4	0
கற்கோட்டை ...	2	0	0	ரோஜா ...	0	12	0

பாலவிநோதினி சந்தாதாரர்களுக்கு பிப்ரவரி முடிய ரூபாவுக்கு ஒரு அணாவீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

4-வது ஆண்டு பிறந்துவிட்டது!

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

இது குழந்தைகளின் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு வெளியிடப்பட்டுவரும்

சித்திரப் படங்களுடன் கூடிய ஒரு சிறந்த மாதாந்தப் பத்திரிகை

இதன் ஆசிரியர்

வரகவி-திரு. அ. சுப்ரமண்ய பாரதி

சந்தாவிபரம்.

வருஷசந்தா உள்நாடு ரூ. 1 8 0 வெளிநாடு ரூ. 2 0 0
மாதிரிப்பிரதி ... ,, 0 2 0
1, 2, 3-வது ஆண்டு வால்யம் கலிகோ தங்கக் கில்டுடன் கூடியது ஒவ்வொன்றும் விலை ரூ. 2 0 0
பாலவிநோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் ரூ. 1 12 0

விலாசம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
ராயப்பேட்டை போஸ்ட், சென்னை.